பிஅன்னீகாபி லாத்துன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யென்னுடைய பராக்குகளாகிறது உன்னைவிட்டும் பராக்காக்கி வைக்கிறதாகவும், நான்மறக்கும்படியாக்கிவைக்கிறதாகவு மிருக்கிறது.

(10-வது பைத்து)

இலாஹீமின்அ வாயிகிமன்ஹி யாத்தின்
அமாலிஹாபி லாத்துன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! விலக்கப்பட்ட தடைகளை விட்டும் என்னைப் பேணிக்காக்கிறது உன்னைத்தவிர இல்லை.

(11-வது பைத்து)

இலாஹீமுக்பி லன்பிக்கபீ உமூரீ
அஊது அனிகுத்தி யாரீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யென்னுடைய கருமங்களில் உன்னைக்கொண்டு முன்னோக்கினவனாக என்னுடைய இகுத்தியாறை விட்டும் உன்னைக்கொண்டு காவல் தேடுகிறேன்.

(12-வது பைத்து)

இலாஹீக்கத்ஸ அல்த்துக்கமின் அஜீபின்
தகப்பல் முஸ்த்த ஜாபன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! அஜாயிபென்னும் ஆச்சரியத்தையுன்னிடத்திற் கேட்கிறேன். என் கேள்வியை ஒப்புக்கொண்டதாகக் கபூல்ச் செய்தருள்.

5-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

நபியே! தங்களிடம் விரும்பி வேண்டினவனை விரட்டவேண்டாம்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து. 12

1-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹுூம்ம றப்பீ
துகூலபிஹாரி தாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னுங் கடலிற் புகுதுகிறதை உன்னிடத்தில் நான் கேட்கிறேன்.

(2-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹுூம்ம றப்பீ
ஸிபாத்திகு ஸஃஸி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சொந்தமாக்கப்பட்ட ஸிபத்துகளையுன்னிடத்தில் நான் கேட்கிறேன்.

(3-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹுூம்ம றப்பீ
ஹகீக்கத்தஸிர்ரி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! இரகசியங்களென்னும் உள்ளமையை உன்னிடத்தில் நான் கேட்கிறேன்.

(4-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹுூம்ம றப்பீ
முக்காஷிபகொய்பி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! மறைவான கருமங்களை வெளியாக்கிக் கொடுக்கிறதை யுன்னிடத்தில் நான் கேட்கிறேன்.

(5-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு-ம்ம றப்பீ.
மதாரிக்கவுல்வி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாடவனே! மேலுலோகத்தை யெற்றிக்கொள்கிறதை யுன்னிடத்தில் நான் கேட்கிறேன்.

(6-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு-ம்ம றப்பீ
அஷிக்கஹுகுதுவஸி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! குதுவஸியாத் தென்னுஞ் சுடரை யுன்னிடத்தில் நான் கேட்கிறேன்.

(7-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு-ம்ம றப்பீ
வகூக்கஜனுபி இஸ்ஸியா இலாஹீ

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சிறப்பாகிய உன்னுடைய சன்னிதானத்தில் நான் தரிபடுகிறதை யுன்னிடத்திற் கேட்கிறேன்.

(8-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு-ம்ம றப்பீ
இயானன்மஅலி காயின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன் சந்திப்புடனே கண்காட்சியையுன்னிடத்திற் கேட்கிறேன்.

(9-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு-ம்ம றப்பீ
பனுஅன்பீ பகாஇன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பகாவிலே பனுவை யுன்னிடத்திற் கேட்கிறேன்.

(10-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு-ம்ம றப்பீ
தனுஅஸ்னுஇ மஜ்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தலைமைத்தனமென்னும் உயர்த்தியைப் புகழ்ச்சி செய்ய உன்னிடத்திற் கேட்கிறேன்.

(11-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
மபாத்திஹக் கன்ஸி மகுபீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கன்ஸுல் மகுபியாவுடைய திறவுகோலை யுன்னிடத்திற் கேட்கிறேன்.

(12-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
அதாஅன்கொய்ற மம்னூஇன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! விலக்கப்படாத கொடையை யுன்னிடத்திற் கேட்கிறேன்.

ஸலவாத்து.

அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின்
வஅலா ஆலி முஹம்மத்.

எனதாண்டவனே! நபிநாயகம் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்பேரிலும், அவர்களின் ஆல் அவுலாதுகளின்பேரிலும், ஸலவாத்து என்னுங் கருணை மாரியைச் சொரிந்தருள்வாயாக.

(1-வது பைத்து)

இலாஹீ றஷ்பு தியமின்மின் ஸலாத்தின்
அலாமன்ஜனு தாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சலவாத்தில் நின்றும் தாயிமான மழையாகிறது தாத்துக்கு ஜனனநபியவர்களின் பேரிலாயிருக்கும்.

(2-வது பைத்து)

இலாஹீக்கத்று ஸலவாத்தித் தவாமி
அலாமத்ரில் அனுமிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாயிமான ஸலவாத்தென்னும் பெருந்துளிகளாகிறது கல்குகளுக்கெல்லாம் மழையானநபியவர்களின் பேரிலுண்டாவதாக.

(3-வது பைத்து)

இலாஹீபைலு ஸைவானிஸ் ஸலாத்தி
அலாறவ்லில் ஹுதாத்திவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சலவாத்தென்னும் வெள்ளத்தின் ஒலிக்குதலானது நேர்வழி யென்னும் பூங்காவனமான் நபியவர்களின் பேரிலுண்டாவதாக.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

புதன் கிழமையில் ஓதவேண்டிய முனாஜாத்து.

மர்த்தபத்து றாஹானிய்யா.

மக்கானுல் முஸ்தஜாப்.

1-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

நாயனே! யென்னைப் பறக்கத்துச் செய்யப்பட்ட தலத்தில் இறக்கிவை. நீயாகிறவன் இறக்கிவைக்கிறவர்களி லெல்லாம் கைருனவனாயிருக்கிறாய்.

(1-வது பைத்து)

இலாஹீயா இலாஹீயா இலாஹீ
பிபிஸ்மில்லாஹி பையாலின் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஆண்டவனே! நிரம்ப ஒலிக்குதலுடைய திருநாமத்தைக் கொண்டு துவர்க்கஞ் செய்கிறேன்.

(2-வது பைத்து)

இலாஹீ அன்த கைறுல்முன்ஸி லீனா
பிபைலில்குத்ஸி பீனாயா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! நீயாகிறவன் எங்களில் துய்தான உதிப்பைக்கொண்டு இறக்கிவைக்கிறவர்களி லெல்லாம் கைருனவனாயிருக்கிறாய்.

(3-வது பைத்து)

இலாஹீக்கத்து பீஹுல்மக்த ஸாத்தீ
பிபைலில்அக்த ஸாத்திவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நிரம்பவும் துய்தாகிய ஒலிப்பைக் கொண்டு துய்தாக்கப்பட்டதை நீ ஒலிப்பிவிக்கிறாய்.

(4-வது பைத்து)

இலாஹீக்கான மாக்கானல் மஆனீ
மயாதீனல் கியானிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உள்ளிரங்கத்தி லுண்டானவைகளெல்லாம் வெளியரங்கத்திலுண்டானதின் மைதானங்களாக ஆயிட்டது.

(5-வது பைத்து)

இலாஹீக்கும்து அறுவாஹன் ஹயாத்தன்
பிவக்பிறுபூபி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னுடைய நாயகத்தனம் நேர்பாடாக ஆகிறது கொண்டு நான் ஹயாத்துடைய றாஹுகளாகத் தரிபட்டேன்.

(6-வது பைத்து)

இலாஹீமின்மு வர்க்ககத்தில் உஜூதி
தகத்தம்தாலூ ஜூதவயா இலாஹீ.

(இதன்பொருள்.)

எனதாண்டவனே! உன்உஜூதின் நேர்பாட்டில் நின்றும் ஆலங்களை யுண்டாக்கினாய் முந்தி விட்டாய்.

(7-வது பைத்து)

இலாஹீமின்மு கத்தமத்தில் உஜூதி
லமற்த்தமஅல் உஜூதிவயா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! உன்உஜூது முந்தி யிருக்கிறதில் நின்றும் ஆலத்துடனே வெளியானாய்.

(8-வது பைத்து)

இலாஹீமின்ம லாஹிரிஹிர் ரியாத்தின்
தகொய்யற கொய்றி யாத்துன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சிர்று வெளியாகுந்தானத்தில் நின்றும் வேற்றுமைகள் வேற்றுமையாகி விட்டது.

(9-வது பைத்து)

இலாஹீக்குல்லு அம்ரின்பைன அம்ரின்
பிக்குன்பயக்கூனு ஸும்றன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கருமங்களடங்கலும் குன்என்கிற ஏவலுக்கிடையில் மொத்தமாக வுண்டாயிட்டது.

(10-வது பைத்து)

இலாஹீமின்க மவ்ரிதுக்காயி னாத்தின்
பிஅதமின்வாரி தாத்துன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஆலங்களுண்டாகுந் தானமாகிறது இல்லாமையைக்கொண்டு வுன்னில் நின்றுமுண்டானதாயிருக்கிறது.

(11-வது பைத்து)

இலாஹீஷிற்த்து மஃதூமன் பிகதமின்
வமவ்ஜூதன்பி அதமின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நானாகிறவன் பூர்வீகத்தைக் கொண்டிழக்கப்பட்டவனைவும், இழக்குதலைக்கொண்டு உண்டாக்கப்பட்டவனைவுமிருக்கிறேன்.

(12-வது பைத்து)

இலாஹீலீ உஜூதுன்ஐனு அதமின்
லகஸமுன்கிஸமு கஸமின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எனக்கு இல்லாமைதானகிய உஜூதுண்டாயிருக்கிறதென்று சத்தியமாகவும், சத்தியத்தின் வகைகளாகவும் சொல்கிறேன்.

2-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

எங்கள் நாயனே! எங்களுக்குத் துன்யாவுடைய நன்மையையும், ஆகிறத்துடைய நன்மையையும், கொடுத்து நரகத்துடைய அதாபை விட்டுங் காத்துக்கொள்வாயாக.

இந்தஆயத்தின் கருத்தமைந்த பைத்து 12.

(1-வது பைத்து)

இலாஹீபீக்க ஹஸனுத்துன் வஹ¬ஸ்னுன்
பஹல்லீஹைஹபத் துன்ஹ¬ஸ்னுன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவ்வனே! உன்னில் நன்னமகளும், அழகுகளு மிருக்கிறது. ஆனதால், எனக்குச்சலிப்பும் பயங்காமுமுண்டா?

(2-வது பைத்து)

இலாஹீறப்ப னுஅஹ்றவின் இலேனு
பியிஹ்ஸானின் அலேனுயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீ யெங்கள்பேரில் உபகாரஞ்செய்கிறது கொண்டு எங்களளவில் அழகாக்கிவை.

(3-வது பைத்து)

இலாஹீஸ¬ன்பி னுதாறவ் பிறுரி
வபீதாரில் கறுரிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எங்களை மிரண்டோடுதலென்னும் வீட்டிலேயும், தரிபாடென்னும் வீட்டிலேயுங் காத்துக்கொள்.

(4-வது பைத்து)

இலாஹீத் தூலு துன்யானுக் கயவ்மீ
பஅவ்ஜிபுபைன ஹாஸவ்மீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எங்களின் துன்யாவுடைய நீளமாகிறது ஒரு நாளைப்போலேயாயிருக்கும். ஆனதினாலே அதுக்கிடையில் என்னுடைய நோன்பை வாஜிபாக்கிவை.

(5-வது பைத்து)

இலாஹீஸாஅத் துன்கத்றுத் துனுஇ
பக்குல்லுன்பில் பனுஇவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! அடங்கலும் பனுவாயிருக்கிற ஹாலில். ஒருஸாஅத்தாகிறது துன்யாவுடைய கதிருக இருக்கும்.

(6-வது பைத்து)

இலாஹீக் கத்ற ஜுனுதுபினூரி தாத்தின்
வஅக்மலிபனுலி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னு மொளிவைக் கொண்டும், வரிசையில் நிறப்பமானதைக்கொண்டும் நானுதரவு வைத்திருக்கிறேன்.

(7-வது பைத்து)

இலாஹீ அஹ்றயி னீபிக்கமுஸ்த கீமன்
மினல்அன்வாரி வீமன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஒளிவுகளில் நின்றும் அடையாளமுண்டாயிருக்கிற ஹாலில் என்னை உன்னைக்கொண்டு செவ்வுறுதலானவனாக ஹயாத்தாக்கிவை.

(8-வது பைத்து)

இலாஹீக்கஹ்ஹி லன்கல்பீ வஐனீ
பினூரிஸவாதி ஐனீயா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! யென்னுடைய கல்புக்கும், கண்ணுக்கும் என்கண்ணின் கறுப்பென்னு மொளிவைக்கொண்டு சுறுமா இட்டருள்.

(9-வது பைத்து)

இலாஹீமின்க இல்ஹாமுன்வ பஹ்முன்
பமாவஹ்முன்லி பஹ்மின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உதிப்பும், விளக்கமும் உன்னில் நின்றுமாயிருக்கிறது. விளக்கத்துக்குச் சந்தேகங்கிடையாது.

(10-வது பைத்து)

இலாஹீமூஜிலுன் அஹ்பாலு வஹ்மின்
மத்தாத்தன்ஜல்லு அன்பஹ்மின் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சந்தேகமென்னுங் கயறுகளானது பயங்கரமாக்கிவைக்கிறது. அதுவிளக்கத்தைவிட்டும் எப்போது நீங்கும்.

(11-வது பைத்து)

இலாஹீமஷ்ரி கன்இஜ்அல் வஷறுகன்
லிஷம்ஸிஸ்ஸாத்தி பீபறுகன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதுக்குடைய மஷ்ரிகையும், பிரகாசிக்குதலையும் என்னில் இலங்கினதாக ஆக்கிவை.

(12-வது பைத்து)

இலாஹீயிதற ஐத்துக்கமிதுல ஷம்ஸின்
பஅஷ்ஹறதுமுஃமி னன்குதுஸன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நான் உன்னைப்பொழுதைப்போல் கண்டேனேயானல் துய்மையால் முஃமினுனவனுகவெளியாயிடுவேன்.

3-வது ஒதவேண்டிய ஆயத்தின் மஅனு.

பொழுதாகிறது அதுதரிபடுந்தானத் தளவிலேயே நடக்கிறதாகிறது. அறிவும், சிறப்புமுடைய அல்லாஹுத்த ஆலாவின் ஏற்பாடாக இருக்கும்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து. 12

(1-வது பைத்து)

இலாஹீயின்ஜ றைத்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸலிஹறல் மனுஸிலுயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதை நடத்தாட்டிவைத்தாயானல் அதற்கு மன்ஸில்கள் கிடையாது.

(2-வது பைத்து)

இலாஹீயின்ஸ பஹ்த்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸலஹறல் அஷிய்யுவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக்கொண்டு விடிவேறுக்கிவைத்தாயானல் அதற்கு அந்திபடுகிறதுகிடையாது.

(3-வது பைத்து)

இலாஹீயின்த லஃத்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸலஹறல் குறாபுவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக்கொண்டு உதயமானயானல் அதற்கு அடைதல் கிடையாது.

(4-வது பைத்து)

இலாஹீயின்ஷ ரிக்த்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸலஹறல் லலாமுவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக்கொண்டு பிரகாசித்தாயானால் அதற்கு இருளுதல் கிடையாது.

(5-வது பைத்து)

இலாஹீயின்கஷபுத்தபிஷம்ஸி தாத்தின்.
பலைஸலஹல்க்கு ஸுபுவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக்கொண்டு வெளியானாயானால் அதற்குக் கிராணம் பிடிக்குதல் கிடையாது.

(6-வது பைத்து)

இலாஹீயின்லஹற்த்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸலஹல்பு தூனுவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக்கொண்டு வெளியரங்கமானாயானால் அதற்கு மறைதல் கிடையாது.

(7-வது பைத்து)

இலாஹீயின்தகைத்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸலஹல்மதாரிஜுயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக்கொண்டு உயர்ந்தாயானால் அதற்குத்தறஜா இவ்வளவென்று கிடையாது.

(8-வது பைத்து)

இலாஹீயின் அறஜ்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸ்லஹல்ம ஆரிஹுயா இலாஹீ.

(இதன்பொருள்.)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக் கொண்டு ஏறினாயானால் அதற்கு ஏறுந்தானங்கள் கிடையாது.

(9-வது பைத்து)

இலாஹீயின்றபஃத்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸலஹல் ஹிஜாபுவயா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக் கொண்டு மேலாகிட்டாயானால் அதற்குத் திரைகிடையாது.

(10-வது பைத்து)

இலாஹீயின்பறஸ்த்தபிஷம்ஸி தாத்தின்
பலைஸலஹஸ் ஸுருதிகுயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக்கொண்டு வெளியானயானல் அதற்கு மறைக்கிற வஸ்துக்கிடையாது.

(11-வது பைத்து)

இலாஹீயின்வ ஸல்த்தபிஷம்ஸி தாத்தின்
பலேஸலஹன் பிஸாலுன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக் கொண்டு சேர்ந்தாயானல் அதற்குப் பிரிதல் கிடையாது.

(12-வது பைத்து)

இலாஹீயின்ஜ மஃத்தபிஷம்ஸி தாத்தின்
பலேஸலஹன் பிருக்குன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தென்னும் பொழுதைக் கொண்டு சேகரமானயானல் அதற்குப் பிரிவினை யுண்டாகிறது கிடையாது.

4-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅன.

எங்கள் நாயனே! எங்கள் பாவங்களைப்பொறுத்தருள். எங்கள் தீங்குகளை மூடிவிடு. எங்களை அன்பியாக்கள், ஸாலிஹீன்கள் கூட்டத்தில் மவ்த்தாக்கிவிடு.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து 12

(1-வது பைத்து)

இலாஹிக்பிறுது ஞபீக்கபுல அம்ஸீ
வஷம்ஸீக்கபுல றம்ஸீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! என்னிடைய் பொழுதாகிறது என்னுடைய கப்றுக்கு முன்னுலிருக்கிற ஹாலில். மீறற்றைக்கு முன்னுள்ள என்னுடைய பாவஙகளைப் பொறுத்தருள்.

(2-வது பைத்து)

இலாஹீயின்ன முத்கபுலல் மமாத்தி
ஹயாத்துன்பில் ஹயாத்திவயா இலாஹீ

(இதன் பொருள்)

எனதாண்டவனே! மவ்த்துக்குமுந்தி நாங்கள் மவ்த்தானேமேயானல் ஹயாத்திலே ஹயாத்தாயிருக்கும்.

(3-வது பைத்து)

இலாஹீஸஹ்ஹி லன்னீஸைற ஜதுபின்
இலைக்கபினஹ்ஜி குறுபின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னளவில் முடுகுதலான பாதையில் ஜதுபைக்கொண்டு நடக்கிறதை யெனக்கிலேசர்க்கிவை.

(4-வது பைத்து)

இலாஹிக்ஷிபுஹு கீக்கத்தக்குல்லி றம்ஸின்
கதீமத்திமகுபிக் கன்ஸின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பூர்வீகமாகிய கன்ஸுல்மகுபியாவுடைய றம்ஸுகளின் ஹகீக்கத்தை யெனக்கு வெளியாக்கிவை.

(5-வது பைத்து)

இலாஹீயின்கு ஷிபுத்தபலா ஹிஜாபுன்
பதாக்கலனு ஸவாபுன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீ வெளியானயானல் உனக்குத்திரை கிடையாது. இதானது எங்களுக்குச் சரியானதாயிருக்கும்.

(6 வது பைத்து)

இலாஹீக்குன்மு னீறன்பைன ஐனீ
மனுறன்குர்றத் தைனீயா இலாஹீ

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யென்னுடைய இரண்டு கண்ணுக்கு மிடையில் குளிர்ச்சியாக்கிவைக்குமே யப்படிப்பட்ட ஒளிவாகுந் தானத்தை யொளிவாக்கிவை.

(7-வது பைத்து)

இலாஹீமின் இனயத்திக்கபுத்த ஹன்லீ
பிகொய்பிக்க வக்ஷிபன்லீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னுடைய வுதவியில்நின் றும்எனக்கு கைபென்னு மறைவைத்திறந்து வெளியாக்கிவை.

(8-வது பைத்து)

இலாஹீபிக்க அவ்ஸாபுல் உமூமி
வஅவ்ஸாபுல் கதீமிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னில் அடைய வளைத்த லென்னும் வருணிப்பும், பூர்வீகமென்னும் வருணிப்பு முண்டாயிருக்கிறது.

(9-வது பைத்து)

இலாஹீமின்க அவ்வஸிபுனீ அலீமன்
வஜயித்னீ அலீமன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! அறிந்தவனே! உன்னில்நின்றும் என்னை வருணித்தருள். விலுப்பமானவனே யென்னைக்கெட்டியாக்கிவை.

(10-வது பைத்து)

இலாஹீஹாஜத் தீபீக்கஸ் ஸலாமு
பிறஹ்மத்திக்கல் இலாமிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னில் என்னுடைய ஹாஜத்தாகிறது உன்னுடைய வலுப்பமாகிய றஹ்மத்தைக்கொண்டு ஈடேற்றமாகிறதாயிருக்கும்.

(11-வது பைத்து)

இலாஹீதாபி அன்மின்மா னிஆத்தின்
பிஆதாரின் நஜாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஈடேற்றமென்னும் அடையாளங்கொண்டு விலக்கிவைக்கிற கருமங்களைத் தட்டிவை.

(12-வது பைத்து)

இலாஹீமின்மு பாஅதத்தின் னஜாத்துன்
நஜாத்துன்லீ நஜாத்துன்யா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! தூரமாக்கிவைக்கிற கருமங்களை விட்டும் ஈடேற்றமாகிறது எனக்கு ஈடேற்றமாயிருக்கும்.

5-வது ஓதவேண்டிய ஆயத்தின்மஅனா.

நபியே! விரும்பிக் கேட்டவனை விரட்டாதேயும்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து. 12

(1-வது ஆயத்து)

இலாஹீஅஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பிஹம்திஉஜூதி மஜ்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நாயனே! தலைமைத்தனமுண்டா யிருக்கிறபுகழைக் கொண்டு உன்னிடத்தில் கேட்கிறேன்.

(2-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பிவிஜ்தானில் உஜூதிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உஜூதென்னும் உள்ளமையுண்டாகிறது கொண்டு உன்னிடத்திற் கேட்கிறேன்.

(3-வது பைத்து)

இலாஹீ அஸ் அலுல்லாஹும்ம றப்பீ
பியிறுபானில் புதூனிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! மறைவானவைகளை யறிகிறது கொண்டு உன்னிடத்தில் கேட்கிறேன்.

(4-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பிஃணலிமஹலி யிறுபானின் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! இறுபானென்னுங் கொடையைப் பெற்றுக்கொள்கிறதை யுன்னிடத்தில் கேட்கிறேன்.

(5-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பிஹலுறத்திக்கல் அலிய்யத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உயர்த்தியாகிய உன்னுடைய சன்னிதானத்தைக்கொண்டு உன்னிடத்தில் கேட்கிறேன்.

(6-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பிதுறுகிமஹூஹி ஜின் அஹ்தை இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பாதைகளில் நிரம்பவும் மேலான பாதையை யுன்னிடத்தில் கேட்கிறேன்.

(7-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பிஅஸலில்அஸலி யாத்திவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பூர்வீகங்களில் பூர்வீகமாகிய வுன்னுடைய திருநாமத்தைக்கொண்டு வுன்னிடத்தில் கேட்கிறேன்.

(8-வது பைத்து)

இலாஹீஅஸ்அ லுல்லாஹு ம்ம றப்பீ
பிறாஹீகுத்ஸி யாத்திவயா இலாஹீ.

(இதன்பொருள்.)

எனதாண்டவனே! றாஹுகுத்ஸைக்கொண்டு வுன்னிடத்தில் கேட்கிறேன்.

(9-வது பைத்து)

இலாஹீஅஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பிஅல்தாபிர் றமூஸிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! மறைவாகிய மெல்லினமான நுட்பங்களைக்கொண்டு வுன்னிடத்தில் கேட்கிறேன்.

(10-வது பைத்து)

இலாஹீஅஸ்அ லுல்லாஹு ம்ம றப்பீ
பிஅஸ்றாரில்ல தாயிபியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கிருபையென்னும் சிர்றுகளைக்கொண்டு வுன்னிடங்கேட்கிறேன்.

(11-வது பைத்து)

இலாஹீஅஸ்அ லுல்லாஹு ம்ம றப்பீ
பிநூரின்முஸ்த னீரின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பிரகாசமாகிய வொளிவைக்கொண்டு வுன்னிடத்தில் கேட்கிறேன்.

(12-வது பைத்து)

இலாஹீஅஸ்அ லுல்லாஹு ம்ம றப்பீ
பிபஹ்மின்கொய்ரி வஹ்மின்யா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! சந்தேகமில்லாத விளக்கத்தை யுன்னிடத்திற் கேட்கிறேன்.

ஸலவாத்து.

அல்லாஹு ம்ம ஸல்லிஅலா முஹம்மதின்
வஅலா ஆலி முஹம்மத்.

எனதாண்டவனே! நபிநாயகம் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்பேரிலும், அவர்களின் ஆல் அவுலாதுகளின்பேரிலும், ஸலவாத்து என்னுங் கருணை மாரியைச் சொரிந்தருள்வாயாக.

(1-வது பைத்து)

இலாஹிஎத்லஃபி அன்ஜுமிக்கஸ் ஸலாத்தி
அலாஷம்ஸில் ஹுதாத்திவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சலவாத்தென்னும் நட்சத்திரங்களை நேர் வழியென்னும்பொழுதான நபியவர்களின் பேரிலுதயமாக்கிவை.

(2-வது பைத்து)

இலாஹீஜுது ஸலவாத்தில் ஜவாதி
அலாக்கன்வஸிர்ற ஷாதிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கொடையாளியின் சலவாத்தென்னுங் கொடையாகிறது நேர்வழிக்குப் புதையலான நபியவர்கள் பேரிலாயிருக்கும்.

(3-வது பைத்து)

இலாஹீதுஹ்பத்தன் ஹிபத்துஸ் ஸலாமி
அலாஹாதில் அனுமிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சலாமுடைய நன்கொடையென்னுங் காணிக்கையானது கல்குகளை நேர்வழிகாட்டுகிறவர்களின் பேரிலாயிருக்கும்.

176020

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

வியாழக்கிழமையில் ஓதவேண்டிய முனாஜாத்து.

மர்த்தபத்து நூருனிய்யா.

மக்கானுல் முஸ்தஜாப்.

1-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

எங்கள் நாயனே! எங்களுடைய ஒளிவை யெங்களுக்கு நிரப்பமாக்கிவை. எங்களுடைய பாவங்களைப் பொறுத்தருள். மெய்யாக நீயாகிறவன் வஸ்தடங்கலின் பேரிலும் தத்துவ முடையவனாயிருக்கிறாய்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து 12

(1-வது பைத்து)

இலாஹீயா இலாஹீயா இலாஹீ
பிபிஸ்மில்லாஹி ஸமதின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஸமதாகிய அல்லாவென்னுந் திருநாமத்தைக்கொண்டு இதை தொடங்குகிறேன்.

(2-வது பைத்து)

இலாஹீபின்த நூறமுஹம்ம திய்யி
பிஸமதானிய்யத் தின்பையன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் ஸதமானியத்தைக்கொண்டு நூறு முஹம்மதிய்யாவாக வெளியாயிட்டாய்.

(3-வது பைத்து)

இலாஹீ அன்த லீஸக்க மிதுலி ஷையின்
பஸீறன்ஸாமி அன்ஹையன் இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! நீயாகிறவன் ஹயாத்தானவனாகவும் கேட்கிறவனாகவும், பார்க்கிறவனாகவுமிருக்கிற ஹாலில் யாதொரு வஸ்தைப்போலுமில்லை.

(4-வது பைத்து)

இலாஹீமா மதீலுன்பீ மிதாலின்
மிதாலுன்பீ கியாலின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் ஒரு வுவமையிலும் ஒப்பானவனில்லை. உவமையாகிறது கனவிலாயிருக்கும்.

(5-வது பைத்து)

இலாஹீஉல்வி யன்கத்குன்த ஷவ்னன்
நஸ்ல்த்தபி ஸ¬புலி யின்கவ்னன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் உயர்த்தியாகிய ஷஉலூன்களாக ஆயிருந்தாய் ஆலத்தால் கீழானதிலிறங்கினாய்.

(6-வது பைத்து)

இலாஹீமஅவஸி பாத்தின்ஸாபி லாத்தின்
தகத்தஸ பைலு தாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கீழான ஸிபாத்துகளுடனே தாத்தின் ஒலிப்பானது துய்தாயிட்டது.

(7-வது பைத்து)

இலாஹீவாஸி பன்அஸ்மாவு தாத்தின்
தனவ்வஅனவ்இ யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வருணிக்கிறதால் தாத்துடைய இஸ்முகளான்து வகைகளைக்கொண்டு வகையாயிட்டது.

(8-வது பைத்து)

இலாஹீக் குன்த நூறஸமாவ அறுஷின்
மஅல்அறலீன பறுஷன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் பூமிகளுடனே வானத்துடைய வொளிவாகவும், அறுஷ¬டைய வொளிவாகவுமாகிவிட்டாய்.

(9-வது பைத்து)

இலாஹீஸப்ப ஹல்அபுலாக்கு தறுஸன்
மஅன்அம்லாக்குக் குறுவின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வானங்களுடனே குறுசியுடைய மலக்குகளும் வளமையாகத் தஸ்பீஹு செய்கிறார்கள்.

(10-வது பைத்து)

இலாஹீஅந்த மிபுத்தாஹுல் குயூபி
வமிஸ்மாறுல் ஃயூபிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறயன் மறைவுகளுக்குத் திறவுகோலாகவும், மறைவுகளுக்கு ஆணியாகவுமிருக்கிறாய்.

(11-வது பைத்து)

இலாஹீஅந்த மிஸ்பாஹுல் புதூரி
வமிஷ்காத்துஸ் ஸுதூரிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் பிறையென்னும் தீபங்களாகவும், கல்புகளுக்குப் பந்தமாகவுமிருக்கிறாய்.

(12-வது பைத்து)

இலாஹீஅந்த ஸத்தாறுல்உயூபி
லபத்தாஹுல் குயூபிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் ஐபுகளை மறைக்கிறவனாகவும், மறைவானவைகளைத் திறக்கிறவனாகவுமிருக்குறாய்.

2-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

எங்கள் நாயனே! நீயிறக்கிவைத்ததைக்கொண்டு ஈமான் கொண்டோம். உன்னுடைய றசூலையுந் தொடர்ந்தோம். சாட்சி சொல்கிறவர்களுடனே யெங்களையு மெழுதிவிடு.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து. 12

(1-வது பைத்து)

இலாஹீஷாஹிதன்பைனீ ஷாஹிதன்
மஅக்கத்குன்த மஷஹூதன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீ யெனக்கிடையில் பார்க்கிறவனாகவும், என்னுடைனே ஹாலிருனவனாகவும், ஹாலிக்கப்பட்டவனாகவு மாகிவிட்டாய்.

(2-வது பைத்து)

இலாஹீக் கத்ந ஸல்த்தபி வில்லி த்தாத்தின்
புஅனுமின் லில்லி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தாத்தின் நிழலில் நீ யிறங்கினாய். நான ந்த நிழற்களில் நின்றுமாயிருக்கும்.

(3-வது பைத்து)

இலாஹீமாப மாவஷம்மல் உஜூது
பிருஇஹத்தில் உஜூதிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஆலமாகிறது உஜூதின் வாடையை முகக்கவில்லை.

(4-வது பைத்து)

இலாஹீமின்க வஹ்மன்லீ உஜூதுன்
பிபஹ்மின்லா உஜூதுன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னில் நின்று மெனக்குச் சந்தேகமாகிய வுஜூதுண்டாயிருக்கிறது. விளங்கிப்பார்க்கிறதில் உஜூதில்லை.

(5-வது பைத்து)

இலாஹீ அன்த மவ்ஜூதுன் உஜூதுன்
பகஸதன்முன்த மக்ஸூதன் இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! நீயாகிறவன் உஜூதும், மவ்ஜூதுமாக் இருக்கும். நாட்டமாகவும், நாடப்பட்டவனாவுமாகிவிட்டாய்.

(6-வது பைத்து)

இலாஹீபம்ஹுா பிஃலிமஅ ஸிபாத்தி
ககவனிக்கஜன தாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீ யென் தாத்துதன்னாக ஆயிருக்கிறது போலே என்னுடைய ஸிபாத்துகளையும் என்னுடைய செயல்களையும் அழித்துவிடு.

(7-வது பைத்து)

இலாஹீக்குன்ல ஞுஅமலன் மகாலன்
வஹாலன் மஅபி ஆலின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சொல்லாலும், செயலாலும், தாத்தாலும் நீ யெங்களுக்கு அமலைக்கொண்டுதவியாயிரு.

(8-வது பைத்து)

இலாஹீஅன்த, ஸமதுன்அன்த பறுதுன்
பிபறுதானிய்யத் தின்அஹதுன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் உன்னுடைய பறுதானியத்தைக்கொண்டு நீ அஹதாகவும், நீ ஸமதாகவும், நீ பறுதாகவுமிருக்கிறுய்.

(9-வது பைத்து)

இலாஹீக்கிபுலத் தன்குன்பைன ஜனீ
பிக்கவ்னிக்கஜன ஜனீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் என்னுடைய தாத்துதன் நீயாயிருக்கிறது'கொண்டு' என்னுடைய கண்ணுக்கிடையில் கிபுலாவாக ஆயிரு.

(10-வது பைத்து)

இலாஹீக்குன்மு வாஜஹத்தன்வ விஜ்ஹன்
வவஜ்ஹன்பைன வஜ்ஹின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! முகம்வைக்குந் தலமாகவும், முகம்வைக்குதலாகவும், முகத்துக்கிடையில் ஒரு முகமாகவும் நீயாயிரு.

(11-வது பைத்து)

இலாஹிபுத்தஹ்பி அஸ்த்தாரின் ஷிதாதின்
வஅபுத்திக்மின் ஸதீதின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கடிதான திரைகளைநீ நீக்கிவிடு. அடைப்புகளைத் திறந்துவிடு.

(12-வதுபைத்து)

இலாஹீயின்தக் கற்த்துக்க கொய்ரி திக்ரீ
பதாக்கஸ் ஷிக்று திக்றுன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னை என்னுடைய திக்று அல்லாதது கொண்டு திக்றுச்செய்வனேயானால் அந்ததிக்ருகிறது திக்ருயிருக்கும்.

3-வ்து ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

எங்கள் நாயனே! யெங்களை விட்டும் அதாபைநீக்கிவை. நாங்களாகிறவர்கள் ஈமான் கொண்டவர்களா யிருக்கிறோம்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து 12

(1-வது ஆயத்து)

இலாஹீமின்க மன்யக்ஷிபு அதாபன்
வமன்யஸ்த்துற்உ யூபன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னில் நின்றுமுள்ள அதாபை யார் நீக்கிவைப்பார்கள்? ஐபுகளை யார் மறைப்பார்கள்?

(2-வது பைத்து)

இலாஹீமின்க மன்யக் பிற்துனூபன்
வமன்யஷ்பீக்கு றாபன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னைத்தவிர யார் பாவத்தைப் பொறுப்பார்கள்? இன்னும் வருத்தத்தை யார் நீக்கிவைப்பார்கள்?

(3-வது பைத்து)

இலாஹீமின்க மன்றப்புன் அலீமுன்
வத்தவ்வாபுன் றஹீமுன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கிருபை செய்கிறவனும், தவ்பாவை கபூல்ச் செய்கிறவனுமாகிய நாயன் உன்னைத்தவிர யாருண்டு?

(4-வது பைத்து)

இலாஹீமின்க மன்லீபன்ஸ¬ றன்லீ
பிஜனிஇனயத் தின்குன்லீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எனக்கு உன்னைத்தவிர வுதவியானவன் யார்? ஆனதால் நீ யெனக்குதவிசெய்து எனக்குதவி யென்னுங் கண்ணாக ஆயிருந்தருள்.

(5-வது பைத்து)

இலாஹீமின்க மன்அபுறஸூ பிஹார்லீ
பமாஅஷ்க்கூ பிஜாலீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னல்லாது என்னுடைய ஹாலைக் கொண்டு நிரம்பவெளியானவன்யார்? ஆனதினாலே என்னுடைய ஹாலைக்கொண்டு முறையிட வேண்டியதில்லை.

(6-வது பைத்து)

இலாஹீமின்க மன்லீயா தலீலுன்
பஅன்தலனல் வக்கீலுவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! அத்தாட்சியானவனே! யுன்னைத்தவிர எனக்கியாருண்டா யிருக்கிறார்கள்? எங்களுக்கு நீயே காரியஸ்தனாயிருக்கிறாய்.

(7-வது பைத்து)

இலாஹீமின்க மன்மின்னா முதாவுன்
அதாஅன்ஜூத்மத் தாஅன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நாங்கள் வழிப்படப்பட்டவன்உன்னைத் தவிர யார்? கொடையும், சுகண்டியுமெங்களுக்குக் கொடுத் தருள்.

(8-வது பைத்து)

இலாஹீமின்க மன்யற்அபு லதூபன்
வமன்யஃதிபு அதூபன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கிருபை செய்கிறதாகக் கிருபைசெய்கிறவனும், இரக்கம் வைக்கிறதாக விரக்கம் வைக்கிறவனும் உன்னைத் தவிரயார்?

(9-வது பைத்து)

இலாஹீமின்க மன்யறுஸூகு இபாதன்
அமானுமின் இபாதின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! அடியார்களுக்கு இரணங்கொடுக்கிறவன் உன்னைத் தவிர யார்? நானுகிறவன் உன்னுடைய அடியாரில் நின்றுமுள்ளவனாயிருக்கிறேன்.

(10-வது பைத்து)

இலாஹீமின்க மன்யஹ்யூ அலேனா
பிஅன்உமிஹீ யிலேனா யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யெங்களளவிலே நிஅமத்துகளைக் கொண்டு எங்கள்பேரிற் கொடைகொடுக்கிறவன் உன்னையல்லாது யார்?

(11-வது பைத்து)

இலாஹீமின்க மன்யக்லீ முறாதன்
ஹவாயிஜனா முரீதன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யெங்களுடைய ஹாஜத்துகளையும், எங்களுடைய நாட்டங்களையும் நிறைவேற்றிவைக்கிறவன் உன்னைத் தவிர யார்?

(12-வது பைத்து)

இலாஹீமின்க மன்யறுஹமுப ஹபுலீத்
தகப்பல்வஸ்த்த ஜிபுலீயா இலாஹீ

(இதன்பொருள்.)

எனதாண்டவனே! உன்னையல்லாது கிருபைசெய்கிறவன் யார்? ஆனதினாலே நீ யென்னுடைய கேள்வியை யொப்புக் கொண்டு எனக்கு நன்கொடை கொடுத்தருள்.

4-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

எங்கள் நாயனே! எங்களை நேர்வழி காட்டினதின் பின்னால், எங்கள் கல்புகளை ஹக்கைவிட்டுத் திருப்பிவிடாதே. உன்னிடத்தில் நின்றுமுள்ள கிருபையை யெங்களுக்குக் கொடை கொடுத்தருள். திட்டமாக நீயாகிறவன் மிகவுங்கொடை கொடுக்கிறவனா யிருக்கிறாய்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து. 12

(1-வது பைத்து)

இலாஹீஅன்த வஹ்ஹாபுல் பறாயா
பஹபுலீ பில்ஹறாதாயாயா இலாஹி.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் கல்குகளுக்கு மிகவுங்கொடை கொடுக்கிறவனாக இருப்பதால் எனக்கு நேர்வழியைக் கொடைகொடுத்தருள்.

(2-வது பைத்து)

இலாஹீமின்ல துன்கலனல் ஹதாயா
பஜுஊத்கபுலல் மஞயாயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யெங்களுடைய மவ்த்துகளுக்குமுன் உன்னிடத்தில் நின்றுமுள்ள கொடைகளை யெங்களுக்குக் கொடுத்தருள்.

(3-வது பைத்து)

இலாஹீறப்பி அன்வஸில்னீ ஷிபாஅன்
தவாஅஜமீயி தாஇன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நஷலடங்கலுடைய மருந்தையும், சவுக்கியத்தையும் எனக்கு இறக்கிவை.

(4-வது பைத்து)

இலாஹீஸல்லத் தன்லாலாத்த ஷித்னீ
வலாக்கின்ஸாதத் தன்ஷித்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! சறுகுலையெனக்கு அதிகப்படுத்தாதே. என்கிலும், ஆகிறத்துடைய ஸவாதாவை யெனக்கு அதிகப்படுத்தியருள்.

(5-வது பைத்து)

இலாஹீகுதுபி ஞமின்நாஷி யாத்தின்
லித்தஸ்மக்நஜ்ஷி யாத்துன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எங்களைவிட்டும் குற்குறிகள் விலகிப் போவதற்காக வேண்டி யெங்களுடைய முன்னெற்றி ரோமங்களைப் பிடித்தருள்.

(6-வது பைத்து)

இலாஹீஅன்த லீகிஃ மல்வக்கீலு
அயாம வ்லல்ஜலீலுவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வலுப்பமானவனே!! உதவி செய்கிறவனே!!! நீயாகிறவன் எனக்கு நல்லகாரியஸ்தஞக விருக்கிருய்.

(7-வது பைத்து)

இலாஹீக்கத்அத் தைத்துக்கபில்த் திஜாஇன்
பலாயிலக்கற்த்தி ஜாஅன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உன்னுடைய வரிசைகளை ஆதரவு வைத்து உன்னிடத்தில் ஒதுங்கிறது கொண்டு உன்னிடத்தில் வந்தேன்.

(8-வது பைத்து)

இலாஹீபவக்கத் தறஜாத்தின் ஊஜாத்தி
றஜவ்த்துக்கயா நஜாத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! எனக்கேேற்ற மானவனே!! ஈடேற்றத்தின் பதவிகளுக்கெல்லாம் மேலானதை நானுன்னிடத்தில் ஆதரவுவைத்திருக்கிறேன்.

(9-வது பைத்து)

இலாஹீ யிஷ்தினீ வஹ்வயில் முருதீ
முரீதுவயா முருதீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! என்னுடைய நாட்டமானவனே!! நாடுகிறவனே!!! யென்னுடைய நாட்டத்தை யுண்டாக்கி யெனக்கு நேர்வழிகாட்டிவை.

(10-வது பைத்து)

இலாஹீயாவக் கீலுபிக்கத்திக் காலீ
லமீனன்குன் லி ஹாலீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! காரியஸ்தனமானவனே!! என்னுடைய ஊன்றுதல் உன்னைக்கொண்டாயிருக்கிறது. நீயென்னுடையஹாலுக்குப் பிணையாயிருந்தருள்.

(11-வது பைத்து)

இலாஹீதாபி அன்அன்னீ வஐனீ
விஐனீபிக்க மின்பைனீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நானென்கிறதையும், எங்கே யென்கிறதையும் உன்னில் என்னுடைய பிரித்தலைவிட்டும் தட்டிவிட்டருள்.

(12-வது பைத்து)

இலாஹிர்ஹம் இலைய்யஅயா றஹீமுன்
பிமன்னிக்கயாக் கரீமுவயா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! யாக்கரீமே!! யாறஹீமே!!! உன்னுடைய வுபகாரத்தைக்கொண்டு என்னளவிற் கிருபைசெய்தருள்.

5-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

நபியே! தங்களிடம் விரும்பி வேண்டினவனை விரட்டவேண்டாம்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து 12

(1-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு¬ம்ம றப்பீ
பித்தஹ்கீக்கிஷ் ஷ¬ஹுஉதிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஷ¬ஹுஉதை நிச்சியப்படுத்துகிறதைக் கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(2-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு¬ம்ம றப்பீ
பித்தக்ரீரில் இனயத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உதவியைத் தரிபடுத்துகிறது கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(3-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு¬ம்ம றப்பீ
பித்தஃதீரில் கபூலிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கபூல் குணபாடு செய்கிறதைக்கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(4-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு¬ம்ம றப்பீ
பித்தஹ்ஸீலில் உஸூலிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உஸூலுண்டாகிறதைக் கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(5-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹு¬ம்ம றப்பீ
பித்தம்லீக்கில் மறுத்திபியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! மறுத்தபாக்களை யுடையதாக்கி வைக்கிறதைகொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(6-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பித்தஃத்தீதில் கலாவத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தீர்ப்பைக் கெட்டியாக்கிவைக்கிறதைக் கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(7-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பித்தஃலீமில் பலீலத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வரிசையை வலுப்பமாக்கி வைக்கிறதைக் கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(8-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பித்தஜ்ரீதில் பலீஹத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பலீஹத்தை உரிந்து விடுகிறதைக்கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(9-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பித்தஃதீலில் லலாலத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வழிகேட்டை நீக்கிவிடுகிறதைக்கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(10-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பித்ததுலீலில் அதாவத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பகைமையைத் தாழ்மையாக்கிறதைக் கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(11-வது பைத்து)

இலாஹீ அஸ்அ லுல்லாஹும்ம றப்பீ
பித்தஃவீதில் லறாறத்தியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! தங்கடத்தைவிட்டுங் காப்பாற்றுகிறதைக்கொண்டு வுன்னிடத்திற் கேட்கிறேன்.

(12-வது பைத்து)

இலாஹீ அஸ்அலுல்லாஹும்ம றப்பீ
பித்தக்தீமில் மஆதிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கார்மானத்தை முற்படுத்திவைக்கிற தைக்கொண்டு உன்னிடத்திற் கேட்கிறேன்.

ஸலவாத்து.

அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின்

வஅலா ஆலி முஹம்மத்.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நபிநாயகம் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்பேரிலும், அவர்களின் ஆல் அவுலாது களின்பேரிலும், ஸலவாத்து என்னுங் கருணை மாரியைச் சொரிந் தருள்வாயாக.

(1-வதுபைத்து)

இலாஹீஸற்ம தன்ஸல்லிம் தவாமன்
அலாமன்லீ ஸலாமுன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஒருவரின்பேரில் எந்த வொருவரானுல் அவர்களில் நின்று மெனக்கு ஈடேற்றமுண்டாயிருக்கிறதே அந்த வொருவரின் பேரில்தாயிமாகிய சலாமைக் காலாகாலமுஞ்சொல் வாயாக.

(2-வது பைத்து)

இலாஹீமின்க ஸலவாத்துல் கியாரீ
அலாகைரில் கியாரிவயா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! கைறுனவர்களுக்கெல்லாம் கைறுனநபி யவர்களின்பேரில் உன்னில் நின்றும் கைறுன சலவாத்துண்டாவ தாகவும்.

(3-வது பைத்து)

இலாஹிற்ஹம் அலல்ஹாதீ முஈனன்
மஅன்மின் தாபிஈனயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உதவிசெய்கிறவனே! நேர்வழிகாட்டுகிற நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்பேரிலும், அவர்களைத் தொடர்ந்தவர்கள்பேரிலும் கிருபை செய்தருள்வாயாக.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

வெள்ளிக்கிழமையில் ஓதவேண்டிய முனாஜாத்து.

மர்த்தபத்து ஜிஸ்மானிய்யா.

மக்கானுல் முஸ்தஜாப்.

1-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

எனதாண்டவனே! வானுலோகம், பூலோக மடங்கலையும் படைத்தவனே! வெளியானதையும், மறைவானதையும் அறிந்தவனே!

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து. 12

(1-வது பைத்து)

இலாஹீயா இலாஹீயா இலாஹீ.
பிபிஸ்மில்லாஹி பாத்திரியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! படைக்குமென்னத்தக்க அல்லாஹுத்தஆலாவுடைய திருநாமத்தைக்கொண்டு துவக்கஞ்செய்கிறேன்.

(2-வது பைத்து)

இலாஹீக்கறல இஸ்முன் அறல றஸ்மின்
லிபிதறத்திஆத மின்ஜிஸ்மன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஆதமைச் சேகரமுடையவராகப் படைக்கிறதற்கு அடையாளமென்னும் இடையூறை இஸ்மாகிறது முற்படுத்திவிட்டது.

(3-வது பைத்து)

இலாஹீமின்க கறுலுன் அறனுஅதமின்
வபறுலுல்அஸலி கிதமின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பூர்வீகமாகிய அஸலின்விதியும், இல்லாமை யென்னு மிடையூறையுண்டாக்கிறது முன்னில் நின்றுமாயிருக்கிறது.

(4-வது பைத்து)

இலாஹீமின்க அறுலுன் தஹ்த்த அறுலின்
வஅறுலுன் பவ்க அறுலின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! பூமிக்குத் தாழாவுண்டாகிய அகலமும், பூமிக்குமேலேயுண்டான பூமியும் உன்னில் நின்றுமாயிருக்கிறது.

(5-வது பைத்து)

இலாஹீமின்க ஸல்ஸலக் குல்லி பலக்கின்
வமலக்கின்பைன பலக்கின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வானங்கள் ஒன்றோடொன்று தொடுப்பாக இருக்கிறதும், வானங்களுக்கிடையில் மலக்குகள் தொடர்பாகவிருக்கிறதும் உன்னில் நின்றுமாயிருக்கிறது.

(6-வது பைத்து)

இலாஹீதும்த்த மலிக்கன் தஹ்த்த பலக்கின்
லிபலக்கின்பவ்க பலக்கின்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! வானத்துக்கு மேலாவுள்ள வானத்திலும், வானத்துக்குக் கீழாவுள்ளதிலும் நீதரிபாடான இராஜனாக ஆயிருக்கிறாய்.

(7-வது பைத்து)

இலாஹீஅன்த ஸுல்தானுல்க பீரி
வமுஸ்தக்னில் வஸீரிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் வலுப்பமான இராஜனாகவும், மந்திரிமார்களைவிட்டுந் தேவையற்றவனாகவு மிருக்கிறாய்.

(8-வது பைத்து)

இலாஹீஸல்தனத்துக்கஅன்த பறுதுன்
ஜரூமஅஸத்வத் தின்புறுதின் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீதனித்தவனாக இருந்து ஆட்சிபுரிகிறதாகிறது அடைக்கியாள்கிறதுடனே நடந்துக்கொண்டிருக்கிறது.

(9-வது பைத்து)

இலாஹீகாலி அன்குல்லல் ஜிஹாத்தி
தவாலஅக்கல் இதாத்துவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! திசைகளிலுண்டாகிய பகையர்களெல்லாம் உள்ளச்சப்பட்டவர்களாக வுனக்குத் தாழ்ச்சிமை செய்தார்கள்.

(10-வது பைத்து)

இலாஹீக்குல்லு ஜப்பாரின் அனீதின்
தலீலன்மின்கத் தாதீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! முரண்டு செய்கிற வம்பர்களெல்லாம் உனக்குத் தாழ்மைப்பட்டவர்களாக வுன்னைக் கூப்பிட்டார்கள்.

(11-வது பைத்து)

இலாஹீபீம காமாத்தின்வ வக்த்தின்
லனுதிகத்துன் வதிகத்துன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யெல்லாத் தலங்களிலும், எல்லா நேரங்களிலும் உன்னைக்கொண்டு எங்களுக்கு விசுவாசிப்புண்டாயிருக்கிறது.

(12-வது பைத்து)

இலாஹீ அன்த றப்புல்மஷ்ரி கைனி
வறப்புல்மக்ரி பைனிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீயாகிறவன் இரண்டு மஷ்ரிக்குடைய நாயனாகவும், இரண்டு மக்ரிபுடைய நாயனாகவு மிருக்கிறாய்.

2-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

எங்கள் நாயனே! எங்களுடைய நபுசுகளை நாங்கள் அநியாயஞ்செய்து விட்டோம். நீயெங்களுக்குப் பிழைபொறுத்துக்கிருபைசெய்ய வில்லையானால் நாங்கள் நஷ்டவாழர்களில் நின்றுமாகி விடுவோம்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து 12

(1-வது ஆயத்து)

இலாஹீ லுல்மு நபுஸீ ஸல்ஸ லாத்துன்
ஃஹ—ல்லபிமன்னி யாத்தின்யா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! என் நபுஸை அநியாயஞ் செய்கிறதாகிறது தொடர்ச்சியா யுண்டா யிருக்கிறது. ஆன்தினாலே உன்னுடைய வுபகாரத்தைக்கொண்டு அதை யவிழ்த்து விடுவாயாக.

(2-வது பைத்து)

இலாஹீபாக்க னீநபுஸீ பிலுல்மின்
பமின்னீ ஹாற ஹில்முன்யா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! என்னநபுஸாகிறது அநியாயத்தைக்கொண்டு என்னை மேலிட்டது. ஆனதினாலே யென்னில் நின்றும் அமர்த்தியானது தட்டழிந்து விட்டது.

(3-வது பைத்து)

இலாஹீகாலி பன்கத்கான பஃஸி
வஅல்ஜமருக்கி பன்அபவீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யென்னுடைய குற்றமானது திட்டமாக மிகுப்பாகி விட்டது. இன்னும் என்னுடைய நபுஸானது என்படையை மிகைத்ததாயிற்று, என்னுடைய கடுகடுப்பானது ஏறுவாகனத்தைக் கடிவாளம் போட்டு விட்டது.

(4-வது பைத்து)

இலாஹீக்குன்து மலுலூமன்ஸி நபுஸீ
பிலுல்மின்தாக்க ஐஷீயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நானாகிறவன் அநியாயத்தைக்கொண்டு என்னபுஸுக்கு அநியாயஞ் செய்யப்பட்டவனாகஆகிவிட்டேன். இதுதான் என்னுடைய நிருவாகம்.

(5-வது பைத்து)

இலாஹீக்காத னீஉகலுர் றுபூபி
மஅன்கைதுல் குயூபிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! கொய்புகளென்னும் கைதுடனே சந்தேகங்களென்னும் தளைகளான தென்னைக் குபாடஞ் செய்துவிட்டது.

(6-வது பைத்து)

இலாஹீஸிற்த்து முத்தஇய்த் தஆலி
ப்அதில்அன் தஆவியா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நானுகிறவன் வழக்குகளில் வாதியாக ஆகிவிட்டேன். ஆனதினாலே யென்னுடைய வழக்கைத் தொட்டும் நீதஞ்செய்வாயாக.

(7-வது பைத்து)

இலாஹீஜனத் ததுஹபு அம்தனுமு
தஅவ்த்துக்கலா அனூமுவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீ யெங்கே போகிறாய்? அல்லது நீ தூங்கிறாயா? நான் தூங்காமலுன்னைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.

(8-வது பைத்து)

இலாஹீக்குன்து மஸ்மூமல் ஹவாஇ
வமபுகூதத் தவாஇயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நானுகிறவன் ஆசையென்னும் நஞ்சை வைக்கப்பட்டவனாகவும், அதற்கு மருந்தையிழந்தவனாகவும்ஆகிவிட்டேன்.

(9-வது பைத்து)

இலாஹீக்கம்இ பாருத்தின் நலற்னு
அஷத்துமஅன் கபல்னுயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யெம்மாத்திர முறுதிப்பாடுகளையோ கடிசாகப்பார்த்து மறந்து விட்டோம்.

(10-வது பைத்து)

இலாஹீயாஹ யாத்தல் அபுலஸிய்யி
வனூறல்அக்ம ஸிய்யிவயா இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ரெம்ப வரிசையானவர்களுக்கு ஹயாத்தானவனே! ரெம்ப நிரப்பமுடையவர்களுக்கு ஒளிவானவனே.

(11-வது பைத்து)

இலாஹீமால னுகைறுன் பிகொய்ரின்
வஷர்றுன்பல்பிக் குன்ஸைறுன் இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! யெங்களுக்கு வேற்றுமையைக்கொண்டு நலவுமில்லை, தீங்குமில்லை. யெனகிலும் "குன்" என்கிற சொல்லைக்கொண்டு நடக்கிறதுண்டா யிருக்கிறது.

(12-வது பைத்து)

இலா.ஹீபிய்ய பையிலுயா முபீலு
பிஹிக்குல்லன் உபீலுவயா இலாஹீ.

(இதன் பொருள்.)

எனதாண்டவனே! ஒலிப்பிக்கிறவனே! யென்னிலே ஒலிப்பிப்பாயாக. அதைக்கொண்டு நானடங்கலுக்கும் ஒலிப்பிப்பேன்.

3-வது ஓதவேண்டிய ஆயத்தின் மஅனா.

எங்களாண்டவனே! உன்னுடைய றசூல்மார்களின்பேரில் எங்களுக்கு நீ வார்த்தைப்பாடுசெய்தாயே அந்த வொன்றை யெங்களுக்குக்கொடுத்தருள். கியாமநாளில் எங்களைத் தாழ்மைப்படுத்திவிடாதே. திட்டமாக நீயாகிறவன் வார்த்தைப் பாட்டை மாறமாட்டாய்.

இந்த ஆயத்தின் கருத்தமைந்த பைத்து 12

(1-வது பைத்து)

இலாஹீமின்க ஸித்குன் மவ்இ தாத்துன்
வஇபுக்குமுகுலி குன்மின்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உண்மையும், வார்த்தைப்பாடும் உன்னில் நின்றுமாயிருக்கிறது, பொய்யும், வார்த்தைப்பாடு மாறுதலும் என்னில் நின்றுமாயிருக்கிறது.

(2-வது பைத்து)

இலாஹீமின்கக் கறமுன்ஜாரி யாத்துன்
வஷுஹ்ஹுன்பாஹி ஷுன்மின்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! ஜாரியாகிய கொடையானது வுன்னில் நின்றுமாயிருக்கிறது, மிகுதமான ஆத்தத்தன மானது என்னில் நின்றுமாயிருக்கிறது.

(3-வது பைத்து)

இலாஹீமின்க பலுலுன்பாலி லாத்துன்
வஸுஉன்ஷமத் துன்மின்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! மேல்மிச்சமான வரிசையானது வுன்னில் நின்றுமாயிருகிறது, குற்குறியும், தீங்குமானது என்னில் நின்றுமாயிருக்கிறது.

(4-வது பைத்து)

இலாஹீமின்க ஹுஸ்னு முஹ்வஸி ஞத்துன்
வஹுஸ்னுன்நஹ்வஸி யுன்மின்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உபகாரமும், அழகும், உன்னில் நின்றுமாயிருக்கிறது. அவலட்சணமும், துக்கமும் என்னில் நின்றுமாயிருக்கிறது.

(5-வது பைத்து)

இலாஹீமின்க அத்லுன்ஸல்த ஞத்துன்
வஹுல்முன்லவ்மத் துன்மின்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! நீதமும், அரசாட்சியும் உன்னில் நின்றுமாயிருக்கிறது, அநியாயமும், பழிப்பும் என்னில் நின்றுமா யிருக்கிறது.

(6-வது பைத்து)

இலாஹீமின்க வுத்துன்மக்பி ருத்துன்
வதன்புன்ஸல்லத் துன்மின்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! உவப்பும், பொறுக்குதலும் உன்னில் நின்றுமாயிருக்கிறது, பாவமும், சறுகுதலும் என்னில் நின்றுமாயிருக்கிறது.

(7-வது பைத்து)

இலாஹீமின்க ஸுல்ஹுன் முஸ்லிஹாத்துன்
வஹறுபுன்முபுவஸி துன்மின்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! இணக்கமும், சமாதானமும் உன்னில் நின்றுமாயிருக்கிறது. சண்டையும், பஸாதும் என்னில் நின்றுமாயிருக்கிறது.

(8-வது பைத்து)

இலாஹீமின்க இல்முன் முபுஹமாத்துன்
வதஹ்முன்ஜஹ்லத் துன்மின்னீ இலாஹீ.

(இதன் பொருள்)

எனதாண்டவனே! அறிவும், மூடல்களும் உன்னில் நின்றுமாயிருக்கிறது. சந்தேகமும், மடத்தனமு மென்னில் நின்றுமாயிருக்கிறது.

(9-வது பைத்து)

